முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சிறுதொண்டர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

12.12.2018, புதன்கிழமை

1. **ஞானகுருவாய் வந்தநல் அரங்கா**
**ஞானிகள் சக்திபலம் கொண்ட**
**ஞானதேசிகா ஆறுமுக அரங்கா**
**ஞாலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே **விளம்பி தேளின் திங்கள்**
**குறையிலா இருபானாற்திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 26ம் நாள் 12.12.2018, புதன்கிழமை)**
**தெரியவே ஒளி சூட்சும நூலை**
**தேசிகனுக்கு சிறுதொண்டர் நாயனார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் தருமத்தை
ஞானவழி வரும் மக்களெல்லாம்
நம்பகம் கொண்டு ஏற்று வர
4. வருகவே இயற்கை பேரிடரால் வந்த
வறுமை துன்பங்கள் விலகும்
முருகப்பெருமான் தயவு கிட்டியே
முழுமையான மீட்பும் உண்டாகும்
5. ஆகவே இனியேனும் உலக மக்கள்
ஆறுமுகனார் வழிபாட்டுக்கு வந்து
வகையான தயை சிந்தைபட நடந்து
வல்லமையான தருமவழியினை தொடர்ந்து
6. தொடர்ந்துமே அரங்கமகான் காட்டும்
தூய சுத்தசைவ நெறி ஏற்று
தடையற மக்கள் அணுகி வர
தவராசன் வழிகாட்டல் மூலம்
7. மூலமதில் கலியுகம் தேறும்
முழுமையான மீட்பும் பலமும் பெறும்
காலமதில் மீண்டும் தமிழகம்
கட்டாயம் விழித்தெழும் நிலை உயரும்
8. உயர்வானச் சூழலை உருவாக்கும்
உயர் பதவி மாந்தர்களெல்லாம்
தயவை மறக்கா இனியேனும்
தவறிழைக்கா நேருமைபட நடந்து
9. நடந்துமே எல்லாத் துறைகளிலும்
நியாயம்பட கடமை ஆற்றினாலே போதும்
இடரான இந்த நிலைகள் மாறும்
இயற்கையும் அழிவிலா பாதுகாப்பு தரும்
10. தருகவே தமிழகம் தலை நிமிரும்
தன் பின்னடைவை சரி செய்து
முருகன் ஆளுமை அருளாசி கொண்ட
முழுமை ஞானம் பெற்றவர்கள் மூலம்

11. மூலம் ஞான ஆட்சி மலரும்
மும்மாரி பொழிந்து கழனி காப்பு
வளமென எல்லாத் துறையும் வளரும்
வையகமே இந்தவித மாற்றம் பெறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சிறுதொண்டர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலக மக்களை அறியாமை எனும் இருளில் இருந்து மீட்டு அவர்களுக்குள் ஞானஒளி ஏற்றி காத்திட வந்திட்ட உண்மை ஞான குருவே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலக ஞானிகளின் சக்திகளை பலமாக ஆக்கி ஞானபலம் கொண்டிட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 26ம் நாள் 12.12.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே உலக நலம் கருதி சிறதொண்டர் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சிறுதொண்டர் நாயனார்.

எல்லா சக்திகளையும் தந்தருளும் வல்லமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனார் செய்கின்ற தர்மசெயல்களை, ஞானம் நாடி ஞானவழிதனிலே வருகின்ற மக்களெல்லாம் முழு நம்பிக்கையோடு ஒப்புக் கொண்டு வாழ்வினில் தர்மசெயல்களை செய்து வரவர, உலகினில் இயற்கை பேரிடர்களால் வந்திட்ட வறுமையும் அதனால் மக்கள்பட்ட துன்பநிலைகளும் விலகிடும். முருகப்பெருமானின் தயவு முழுமையாக மக்களுக்கு கிடைத்து இயற்கை பேரிடர்களின் துன்பங்களில் இருந்தும் இயற்கை பேரிடர்களில் இருந்தும் முழுமையாக மீட்சி அடைவார்கள்.

ஆதலினால் உலக மக்களே இனிமேலாகினும் முருகப்பெருமானின் திருவடிகளைப் பற்றி மனம் உருகி வழிபாடுகள் செய்து வருவதுடன் உலக மக்களிடத்து தயவுபட நடந்து வல்லமைமிக்க தானதருமங்களை தொடர்ந்து செய்து வாருங்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற தூய சுத்தசைவ நெறியினை ஏற்று வாழ்வினில் உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சைவ உணவை மேற்கொண்டு சர்வல்லமைமிக்க யுகமாற்ற அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை அணுகி ஞானஉபதேசம் அடைந்து கடைப்பிடியுங்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வழிகாட்டல்கள் மூலம் இந்த கலியுகம் கடைத்தேறும் முழுமையான மீட்பும் பலத்தினையும் பெற்றிடும். தக்க காலத்தினில் தமிழகம் மீண்டும் உறுதியாக விழித்தெழும் நிலை உருவாகிடும், தமிழகம் நிலை உயர்வடையும்.

நாட்டினில் உயர்வான மேல்நிலையை முன்னேற்றத்தை உருவாக்கும் உயர்வான பதவியில் உள்ள மக்களெல்லாம் இனியேனும் தயவு உணர்வை மறக்காமல் மக்களிடத்து தயைசிந்தையுடன் நடந்து சுயநலமாய் தவறுகள் ஏதும் செய்திடாமல் நேர்மையான வழியில் தர்மத்தின் வழியில் நடந்து வாருங்கள்.

உயர்பதவி மக்களெல்லாம் நேர்மைபட நடந்து எல்லா துறைகளிலும் நியாய தர்மத்துடன் அவரவரின் கடமைகளை உண்மையுடன் செய்தாலே போதும். உலகினில் உள்ள இயற்கை பேரிடரான நிலைகள் எல்லாம் மாறி இயற்கையும் மகிழ்ந்து இயற்கை பாதுகாப்பை தந்தருளும், உலகினில் அழிவிலாத பாதுகாப்பை தந்தருளும்.

இயற்கை பாதுகாப்பினாலும், பதவியாளர்களின் நேர்மையினாலும் உண்மை செயல்பாடுகளினாலும் தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கும். இதுவரை தமிழகத்தில் அடைந்த பின்னடைவுகளை சரி செய்யப்பட்டு முருகப்பெருமானின் ஞானஆட்சிக்கு முருகப்பெருமானின் அருளாசிகளை பெற்றிட்ட முழுமை ஞானம் பெற்றவர்கள் மூலம் உலகினில் ஞானஆட்சியான உருவாகி மலர்ந்திடும்.

உலகினில் முருகப்பெருமானின் ஞானஆட்சியிலே மாதம் மும்மாரி பொழிந்து விவசாயம் பாதுகாக்கப்பட்டு எல்லா துறைகளிலும் வளம் பெருகி வளர்ச்சியடையும். உலகம் முழுதும் இந்தவித யுகமாற்றங்கள் விரைந்து நடந்திடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சிறுதொண்டர் நாயனார்.

–சுபம்–